अनन्तरं तद्व्यापारभेदोपाधिभेदतो भोगसंज्ञकः परमेश्वरः सदाशिवतत्त्वतात्त्विकानि बिन्दुशक्त्या करोति । तच्च करणं ज्ञानक्रियोन्मेषलक्षणव्यापारमालात् भवति । क्रियाशक्तियोगात् क्रियाशक्तिसम्बन्धविशिष्टात् परमेश्वरात् मनुपतिसहितं अनन्तेश्वरादिभिरुपेतं तदीशतत्त्वमीश्वराख्यं तत्त्वमा-

धिक्येन क्रियाशक्त्युत्कर्षेण सादाख्याधस्तनप्रसरेण जातम् । अत्रापि यदा सृष्टयादिकर्मणि क्रियोद्रिक्ता भवति तदा तद्व्यापारोपाधिविशिष्टः शिव एवाधिकारतत्त्वमीश्वरतत्त्वमिति च व्यपदिश्यते ॥ तदुक्तम्—

न्यग्भवति यत्र शक्तिः ज्ञानाख्योद्रिक्ततां क्रिया भजते ।

ईश्वरतत्त्वं तदिह प्रोक्तं सर्वार्थिकर्तृ सदा ॥ इति ॥

पुनस्तद्व्यापारोपाधिकोऽधिकारसंज्ञकः परमेश्वरः ईश्वरतत्त्वतात्त्विकानि बिन्दुशक्त्या करोति । तच्च करणं क्रियाशक्त्युन्मेषलक्षणव्यापारादेव भवति । सृष्टस्यास्य सदाशिवादितत्त्वतात्त्विकस्य तद्वर्तिनोऽणुसङ्घातस्य च स्थित्यादिव्यापारेण पालनं करोतीत्याह—**क्रियाशक्तियोगादिति** । तच्च पालनमुद्रिक्तज्ञानं ज्ञानाख्यशक्तियोगात, ज्ञानशक्तिसंबन्धविशिष्टात् परमेश्वरात् **मनुनिवहयुक्तैः** सप्तकोटिमहामन्त्रप्रमुखैः सहितं **शुद्धविद्याख्यतत्त्वं** जातम् । अत्राप्यर्थसिद्धो हि निष्पन्नकार्यस्य तद्रक्षणादौ ज्ञानोत्कर्षः तद्व्यापारोपाधिकशिवः स्थूलाधिकारतत्त्वं विद्यातत्त्वमिति व्यपदिश्यते । उक्तं च—

न्यग्भवति कर्तृशक्तिर्ज्ञानाख्योद्रेकमश्नुते यत्र ।

तत्तत्त्वं विद्याख्यम् (प्रकाशकं ज्ञानरूपत्वात्) ॥ इति ॥

पुनरुद्रिक्तज्ञानव्यापारोपाधिकस्थूलाधिकारसंज्ञकः शिवः विद्यातत्त्वतात्त्विकानि बिन्दुशक्त्या करोतीत्यर्थः । इत्थं स्रष्टृरूपस्य औपाधिकभोगाधिकारात्मकस्य शिवावस्थाभेदस्य सदाशिवादितत्त्वस्य भुवनाद्याश्रयत्वाभावात् । अत एव सृज्यमानेषु पारमार्थिकेषु सदाशिवादिसंज्ञितेषु भोगभूमिषु तत्त्वेषु वर्तमानानां विज्ञानकेवलानां मध्ये अनुगृहीतानां विद्याविद्येश्वराणां विचित्रभुवनादीनि स्वभावसुन्दरीरामाः अपरिम्लानान् भोगान् करणाङ्गानि च परमेश्वरः स्वसमवेतया ज्ञानक्रियाशक्त्या विदधाति । तदुक्तं शिवागमे—

तत्त्वेषु तेषु विज्ञानकेवलानां महात्मनाम् ।

भुवनानि विचित्राणि स्वभावललिताः प्रियाः ॥

भोगानप्यपरिम्लानान् अङ्गानि करणानि च ।

विदधाति शिवश्शक्तेरनन्यायाः क्रियात्मनः ॥ इति ॥ ९ ॥

इत्थं शुद्धानि पञ्चतत्त्वान्युक्त्वा अशुद्धानि मायाकलादितत्त्वान्याह—**मायात इति** ॥

मायातोऽनन्तयोगात् प्रसरति च कला कालतत्त्वं नियत्या
विद्या रागः कलातः प्रकृतिसत्त्वमितो रुद्रयुग् गौणमस्मात् ।
बुद्धिश्चातोऽप्याहङ्कृत् त्रिविधगुणयुता धीन्द्रियैर्मानसं प्राक्
कर्माक्षाण्येव मात्राः स्वगुणगतभिदाः पञ्चभूतानि ताभ्यः ॥१०॥

मायातः अशुद्धतत्त्वोपादानकारणभूतात् मायातत्त्वात् **अनन्तयोगा**दशुद्धतत्त्वकर्तृत्वेन विहितानन्तेश्वरस्य संबन्धात् । अनन्तनाथो ह्यात्मनां कर्माणि प्रलये पक्वानि बुद्ध्वा, स्वशक्त्यधिष्ठिताभिः अनन्तशक्तिभिः मायां क्षोभितां च कृत्वा कलादितत्त्वप्रसवाभिमुखीं करोति । तथोक्तम्—

वामादिशक्तिभिर्युक्तः शिवेच्छाविधिचोदितः ।
विद्याराजाधिराजेशो मायां विक्षोभ्य मन्त्रराट् ॥
कलामुत्पादयामास............ । इति ।

एवं मायां च विक्षोभ्य तदधिष्ठानेनैव प्रळयाकलसकलात्मनां भिन्नानि सूक्ष्मस्थूलशरीराणि भुवनादीनि च सृजति । **कला** कलातत्त्वम् । **कालतत्त्वं नियत्या** नियत्याख्यतत्त्वेन सह **प्रसरति** जायते । एतत्त्रितयतत्त्वं मायात उत्पन्नमित्यर्थः । तथा मृगेन्द्रे—

तदनुग्राहकं तत्त्वं कलाख्यं तैजसं हरः ।
मायां विक्षोभ्य कुरुते प्रवृत्त्यङ्गं परं हि तत् ॥ इति ॥

तथा तत्त्वप्रकाशे—

नानाविधशक्तिमयी सा जनयति कालतत्त्वमेवादौ ।
नियतिः नियमनरूपा मायातः साप्यनन्तरं भवति ॥ इति ॥

कलातः कलातत्त्वात् **विद्या रागः** विद्यातत्त्वं रागतत्त्वञ्च जातम् । अनन्तेश्वरः कलां च स्वशक्त्या क्षोभ्य प्रसवाभिमुखीं कृत्वा विद्यातत्त्वं रागतत्त्वं चाजीजनत् । तथा चोक्तम्—

तदर्थं क्षोभयित्वेशः कलामेवाजनि प्रभाम् ।
तत्त्वं विद्याख्यमसृजत् करणं परमात्मनः ॥ इति ॥

अन्यत्रापि—

कलातत्त्वाद्रागविद्ये द्वे तत्त्वे संबभूवतुः । इति ।

इत्थं मायोत्पन्नस्य पञ्चतत्त्वस्य जननानन्तरं गौणादितत्त्वानामुपादानकारणभूतं प्रकृतितत्त्वं कलातत्त्वाज्जातमित्याह—**प्रकृतीति** । **इतः** कलातत्त्वात् प्रकृतितत्त्वं जातम् । तथा मृगेन्द्रे—

ततः प्राधानिकं तत्त्वं कलातत्त्वादजीजनत् ।

सप्तग्रन्थिनिदानस्य यत्तद् गौणस्य कारणम् ॥ इति ।

सप्तग्रन्थिनिदानस्येति (प्रतीकमादाय) भगवता **नारायणकण्ठेन** यत् प्रधानं महदहङ्कारयोस्तन्मात्रपञ्चकस्येत्येवं सप्तानां ग्रन्थीनां कार्ययोनीनामिति व्याख्यातम् । मायोत्पन्नं प्रकृत्यादितत्त्वस्यापूरकं भौवनाध्वनि रुद्रसंश्रयं पुरुषाख्यतत्त्वमस्तीत्याह—**प्रकृतिसखमिति** । प्रकृतिश्च तत् सखा च प्रकृतिसखमिति कृत्वा प्रकृतितत्त्वस्य सहायभूतपुरुषाख्यतत्त्वेन कार्यसहितस्य प्रकृतितत्त्वस्येष्टत्वात् ; प्रकृतिपुरुषाविति प्रसिद्धेश्च । अत एव प्रकृतिसखमित्युक्तम् । **रुद्रयुक्** रुद्रैस्सहितं पुरुषतत्त्वं मायोत्पन्नम् । तथा मृगेन्द्रे—

पुंस्तत्त्वं तत एवाभूत् पुंप्रत्ययनिबन्धनम् ।

आपूरकं प्रधानादेः भौवने रुद्रसंश्रयम् ॥ इति ।

तत एव मायातत्त्वादित्यर्थः ।

ननु पुरुषस्य चेतनत्वादेव शिववच्चैतन्यरूपेषु तत्त्वेष्वध्वतया गणनं न संभवति । अत एव तत्त्वमध्ये अध्वतया पाठो न युक्त इति तत्कथम् प्रकृतिसखं रुद्रयुगित्युक्तम् । सत्यम् । कलादिपञ्चतत्त्वेन बद्धात्मा भोक्तृत्वेन पुरुषतत्त्वनिर्देशं याति । परमार्थतस्तस्याध्वत्वं भुवनाधारत्वञ्च न विद्यते । अत एव तद्भुवनानां रागतत्त्वे स्थितिरित्युक्तम् आगमेषु । तथोक्तम्—

वामदेवोऽथ भीमश्चाप्युग्रश्च भवसंज्ञकः ।

शर्वेशानैकवीरौ च प्रचण्डश्चेश्वरः पुमान् ॥

उमाभर्ता ह्यजोऽनन्त एकश्चैव शिवस्ततः ।

रागतत्त्वे स्थिता ह्येते रुद्रास्तीव्रबलोत्कटाः ॥

तत्रैव पुरुषो ज्ञेयो प्रधानगृहपालकः ॥ इति ।

अत एव पुरुषतत्त्वस्य निर्वाणदीक्षायां प्रकृतितत्त्वशुद्ध्यनन्तरं पुंस्तत्त्वमलशुद्ध्यर्थं प्रकृतेरुपरि रागतत्त्वादधःपाठ इति कश्चिदपि दोषो नास्ति।

अस्मात् प्रकृतितत्त्वाद् गौणं सत्त्वरजस्तमोरूपं गुणतत्त्वं जातम्। तथा तत्त्वप्रकाशे—

अव्यक्ताद्गुणतत्त्वं प्रख्याव्यापारनियमरूपमिह।
सत्त्वरजस्तमोऽपि सुखदुःखमोह इत्यपि च॥ इति।

अतस्त्रिविधरूपाद् गुणतत्त्वाद् बुद्धिश्च सत्त्वरजस्तमोरूपबुद्धितत्त्वं जातम्। उक्तं च—

भवति गुणत्रयतो धीर्विषयाध्यवसायरूपिणी चेह।
सापि त्रिविधा गुणतः प्राक्तनकर्मानुसारेण॥ इति।

अतः बुद्धितत्त्वात् त्रिविधगुणयुता सत्त्वरजस्तमस्स्वरूपैर्गुणैर्युक्ता। सत्त्वादि-गुणानां यथाक्रमं तैजसवैकारिकभूतादिकनामभिः संयुक्ता। **अहंकृत्** अहङ्कारतत्त्वं जातम्। उक्तं च—

सात्त्विकराजसतामसभेदेन स जायते पुनस्त्रिविधः।
स च तैजसवैकारिकभूतादिकनामभिः समुच्छ्वसिति॥ इति।

प्राक् प्रथमं। प्राक्छब्दः तैजसादिद्योतकः। अत एव तैजसाहङ्कारात् मानसं मनस्तत्त्वं **धीन्द्रियैः** बुद्धीन्द्रियैस्सह जातम्। राजसाहङ्कारात् **कर्माक्षाणि** कर्मेन्द्रियाणि जातानि। भूताद्यहङ्कारात् **तन्मात्रा** जाताः। तथा मृगेन्द्रे—

श्रोत्रं त्वक्चक्षुषी जिह्वा नासा च मनसा सह।
प्रकाशान्वयतस्सत्त्वाः तैजसाश्च ससात्त्विकाः॥
वाक्पाणी च भगः पायुः पादौ चेति रजोद्भवाः। (इति।

मात्राः मात्राशब्देन शब्दादयो गृह्यन्ते। **स्वगुणगतभिदाः** स्वेषां शब्दादीनां गुणाः। यथा पृथिव्यां कटकटादिशब्दरूपः, स्पर्शश्चाशीतोष्णरूपः, शुक्लरक्तकृष्णादिनानेकविधं रूपं, मधुरतिक्तादिरूपेण रसोऽपि षड्विधः, गन्धस्तु सुरभ्यसुरभिरूपेण द्विविधः। एतान् स्वगुणान् गताः पृथिव्यादयः। तान् भिन्दन्ति भिन्नत्वेन वर्तन्त इति स्वगुणगतभिदाः हलन्तात् टापमिच्छन्ति केचिदित्याकारान्ताः[1]।

(अनुवर्तते)

---

1 भिदादित्वादङि अकारान्तत्वप्रयुक्तटापि भिदेति क्षमावद्रूपम्।

மீனாட்சியம்மன் கிளிப்பாடல்

ஆதியும் அந்தமும் அற்றவன் வீற்றிடும்
சோதியாம் தில்லையின் தொன்மையைப் பாடி
சோதியில் தோன்றிய சுத்த வெளியுடன்
வாயுவும் பிறவுமாய் வந்தஐம் பூதமும்
ஆதியாய்த் தோன்றிய பேதமும் கூறி,
நேயமாம் சமய நின்மலத் தாலும்
ஆயநற் புனல்பல ஆடுவ தாலும்
ஆயன் குருபதம் ஆய்வத னாலும்
காயமும் காமமும் கன்ம வினைகளும்
தூயன வாகும் துறைதனை விளக்கி
வேதமும் போதமும் வேண்டுநற் கல்வியும்
ஊழ்வினை தன்னை ஒழித்திடா தெனவும்
நல்வினை தீவினை நன்குணர்ந்தாய்ந்து
நல்லன ஏற்று நடத்தலே கல்வி
அல்லன விரும்பல் அல்லார்க் கொல்லும்
எனப்பல இயம்புமிந் நூலா சிரியர்
மதுரை வாழ்ந்த மீனாட்சி என்னும்
அம்மை என்பது அறிவோம் நூலினுள்
சொற்பொருள் எளிமை தோன்றினும் பணியின்
நற்பெருங் கடனென நன்காய்ந் தளிக்குதும்.

முத்தம்மாள் கௌரிநாதன், எம்.ஏ., பி.டி.

[1]மீனாட்சியம்மன் கிளிப்பாடல்

மூலம் R. 2216.

1. ஆதி சிதம்பரத்தே—கிளியே
ஆடி வணங்கிக் கொண்டு
சோதி[2]யிலக்கணத்தைக்—கிளியே
சொல்லுகிறே னுனக்கு.

2. ஆதிமத்தியாந்தமில்லை—கிளியே
ஆனந்த ரூபமடி
சோதியிலே யிருந்து—கிளியே
சுத்த வெளிபிறந்து

3. வாய்வு மக்கினியுங்—கிளியே
வந்தது அப்பு மண்ணு
மேயுஞ் சராசரமுங்—கிளியே
[3]எல்லா வுலகமுமே

4. பேயாமுலகத்திலே—கிளியே
பேதம் பிறந்ததடி
தாயுமலடியடி—கிளியே
தன்னை[4]மறந்தாளடி.

5. ஐந்து பூதமடி—கிளியே
அண்டபிண் டாதிகளும்
வஞ்சனை யாலே[5]யன்றோ—கிளியே
[6]வளைத்து மறைத்ததடி!

6. கொஞ்ச மல்லவடி—கிளியே
கோரனை எத்தனையோ
நஞ்சை யுண்ணுதே—கிளியே
நரக மாகுமடி.

7. ஐஞ்சையும் வேண்டாதே—கிளியே
அச்சு வளருமடி
நெஞ்சை யடக்கடியோ—கிளியே
நேமங்க ளேதுக்கடி?

ஏட்டுச் சுவடியில் உள்ள சொற்கள் :

1. மதுரை மீனச்சியம்மன் திருவாய் மலர்ந்தருளிய கிளிப்பாடல். 2. யிலக்கணத்தை கிளியே. 3. யெல்லாமுலகமுமே. 4. மரந்தாண்டி. 5. யண்ணே, 6. வலைதுமறைத்துதடி.

8. தேகத்தை நம்பி[1] யன்றோ—கிளியே
[2]ஜெனனம் வந்ததடி
மோகத்தைத் தள்ளடியோ—கிளியே
முத்தி கிடைக்குமடி.

9. காம மேதுக்கடி—கிளியே
கன்ம[3] வினைகளன்றோ
நேம மில்லாமல்—கிளியே
நிச்சய மானதடி.

10. சமயம் வேணுமடி—கிளியே
சாதன[4]மற்றதனால்
சமய மற்றவிடங்—கிளியே
சற்குரு பாதமடி.

11. [5]தீர்த்த மாடுவதுங்—கிளியே
தேவதை பூசைகளும்
[6]ஏற்ற நிஷ்டைகளும்—கிளியே
[7]எவ்வெவ் விரதங்களும்

12. [8]ஆலயந் தேடுவதுங்—கிளியே
ஆசாரங் கூடுவதும்
சாலமனந்தெளியுங்—கிளியே
சற்குரு சேவைகளும்

13. ஜெபங்கள் வேணுமடி—கிளியே
ஸ்ரீகுரு சேவைகளாந்
தபசுவந்தவற்கு—கிளியே
தன்மயமாகுமடி.

14. நித்தியா நித்தியங்கள்—கிளியே
நினைவுமுற்றவற்கு
பத்திவிளங்குமடி—கிளியே
பாச மொழியுமடி.

15. [9]அநித்தியந் தேகமென்று—கிளியே
[10]யாரறிவார்களிலே

---

1. அன்னே. 2. ஜெநநம் வந்துதடி. 3. வினைகளன்னே. 4. மற்றதினால். 5. தீற்த்த. 6. யேத்தநிஷ்டை. 7. யெவ்வெவ், 8. ஆலையந். 9. அனித்தியந். 10. யாறறி,

முனிச் சனங்களுக்குங்—கிளியே
மோகமொழியவில்லை.

16. தன்னையறிய வேணுங்—கிளியே
சஞ்சலந் தீரவேணும்
என்ன படித்தாலுங்—கிளியே
இருவினை போகவில்லை.

17. காயத்தை நம்பாதே—கிளியே
கற்பித மாகுபடி
ஆயன் குருபதத்தைக்—கிளியே
ஆராயவேணுமடி.

18. மாய மலடியடி—கிளியே
மக்களுமில்லையடி
மாயத்தை என்னசொல்வேன்—கிளியே
[1]மௌனப் நல்லதடி.

19. அறிவு கெட்டவற்கு—கிளியே
ஆசாரஞ் சொன்னபடி
அறிவறிந்தவற்கு—கிளியே
ஆசார மேதுக்கடி ?

20. சரியை கிரியை முதல்—கிளியே
சாலோக மாதிவரும்
திரிபுடி நாசமடி—கிளியே
சின்மயங் கண்டவிடம்.

21. மனமடங்காமல்—கிளியே
மயக்கந்தீராமல்
அனர்த்த மாகுதடி—கிளியே
ஆசை வயமானல்.

22. அடக்க வேணுமடி—கிளியே
ஆகாக் [2]கருவிகளை
முடக்க வேணுமடி—கிளியே
மோட்சமாகுமடி.

23. உற்றுப் பாராமல்—கிளியே
உலகந் தோணுதடி

1. மௌனநல்லதடி. 2. கருவிகளே.

உற்றுப் பாரடியோ—கிளியே
உன்மயமாகுதடி.

24. சாதி குணங்களில்லை—கிளியே
சமயமில்லையடி
ஊதிப் பாரடியோ—கிளியே
[1]உனக்குள்ளே வெளியாம்.

25. வேதம் படித்தாலுங்—கிளியே
வெளியாகமாட்டாதடி
[2]போதமறிந்தவற்கு—கிளியே
போக்கு வரத்தெரியும்.

26. கர்மயோகங்களுங்—கிளியே
[3]கற்பிதமாகுமடி
வர்ம மறியாமல்—கிளியே
வந்தது அப்பு மண்ணு.

27. பிறவி பொய்யடியோ—கிளியே
போதமறிந்தவற்கு
குறைகளில்லையடி—கிளியே
குருபாதங் கண்டவற்கு.

28. தலங்களேதுக்கடி—கிளியே
தத்துவமுற்றவற்கு
புலங்களற்றதடி—கிளியே
பூரணங் [4]கண்டவற்கு.

29. ஆலயந் தேடுமடி—கிளியே
ஆலயஞ் சுற்றவேண்டாம்
ஆலய மானதுபோல்—கிளியே
ஆத்மாவைப் பாரடியோ!

30. [5]அறத்தை யறியாமல்—கிளியே
அலையுதே யுலகம்
வித்தை யிதுவடியோ—கிளியே
வேகாத் தலையிதுவே.

1. உன்னுக்குள்ளே. 2. போதமரிந்தவற்கு. 3. கர்ப்பித. 4. கண்டவற்க்கு. 5. அரதை.

31. கண்டவ ருண்டானால்—கிளியே
கண்டு அவர்பாதம்
தொண்டு பண்ணடியோ—கிளியே
தோஷங்கள் தீருமடி.

32. சொல்ல லாகாதே—கிளியே
சொல்லவும் வேணுமடி
பொல்லா ருட[1]னுரைத்தால்—கிளியே
பொல்லாப்பு வந்துவிடும்.

33. ஓடுமனத்தோற்கு—கிளியே
யுபதேச மேதுக்கடி
வீடு வெளியாமோ—கிளியே
மெய்யாக வேண்டாமோ?

34. கலக முண்டானால்—கிளியே
காலனுமுண்டடியோ
நிலைக்க வேணுமடி—கிளியே
நித்ய [2]சொரூபத்திலே.

35. பத்தி யுண்டானால்—கிளியே
பார்வை யுரைக்குமடி
வித்து விளங்குமடி—கிளியே
வராது சென்மவினை.

36. மனம் வெறுத்தவற்கு—கிளியே
வையகம் பாழடியோ
கனவு கண்டதுபோல்—கிளியே
காயமு மப்படியோ?

37. [3]நானினி யில்லையடி—கிளியே
நாணமுறை யில்லையடி
தானு மில்லையடி—கிளியே
தன்மயங் கண்டவிடம்.

38. வித்தார மேதுக்கடி—கிளியே
விசுவாச மேதுக்கடி
சுத்தநிலை கிடைத்தால்—கிளியே
சுகானந்த முண்டாமடி.

---

1. னுறைத்தால். 2. சுரூபத்திலே. 3. நானியில்லையடி

39. பிரம மேதுக்கடி—கிளியே
பின்னை யொன்றுமில்லை
[1]பிரம்ம சிதம்பரமே—கிளியே
பேறான முத்தியடி.

40. மதுரைமீ னாட்சியம்மாள்—கிளியே
மகிழ்ந் துரைத்ததமிழ்
இதமாய்ப்படிப்போர்க்கு—கிளியே
எல்லாச் சுகந்தருமே.

கிளிப்பாடல் முற்றுப் பெற்றது.

1. பிறம சிதம்பரமே.

கதிர் காமச் சிந்து

'அரோகரா' 'கதிர்காமத் தெய்யோ' என்னும்
அடியவர்தம் ஆன்மஒலி யறியுந் தோறும்
ஆண்டவன்றன் அருளொலியா யறியுங் கண்டிக்
கதிர்காம வேலவன்றன் கருணை தன்னை
அன்புருக என்புருகி அருளை வேண்டும்
அன்பரெலா மடைந்திடுமா றருளும் வண்ணம்
ஆண்டவனும் அறுமுகவன் அருளுங்கூட்ட
அவனடியில் அமைவுடனே ஆய்ந்தளிப்பாம்.

உள்ளத்துணிவு இல்லாத ஆன்மா உலகிலில்லை. அது போலவே ஆண்டவனின் அருளை வேண்டாத ஆன்மாவும் இல்லை. உடலும் உள்ளமும் உரம் பெற்றாராயினும், நோக்கமும் முயற்சியும் நன்குடையாராயினும், தன்னம்பிக்கையில் தளராத ஊக்கமுடையா ராயினும் அச்சம் நிறைந்தவிடத்தில் தன் முனைப்பும் தன்னம் பிக்கையும் அடங்குதல் இயற்கை. ஆண்டவனின் அருளுரு அவரையறியாமலே நெஞ்சில் நிலை பெறுவதும் இயல்பு. அச்சம் நீங்கி ஆன்மா உய்ய ஆண்டவன் அருளை நாடுவது வழக்கம்.

வளம் செறிந்தகாடும் வானளாவியமலையும், வனவிலங்கும் மலைப்பாம்பும், ஆயிரக்கணக்கான அடி உயரத்திலிருந்து விழும் அருவின் ஒலியும் ஒருங்கமைந்து அச்சம் விளைவித்து ஆன்மாக்களை அடிமைப்படுத்தி, ஆண்டவன் அருள்நினைந்து ஆனந்தவெள்ளத்தே ஆழ்த்துவிக்கும் அரியதோர் இடம் தென்னிலங்கையில் வேலவன் திருக்கோயில் கொண்டிருக்கும் கதிர்காமம்.

திருநெல்வேலி, வைத்தீசுவரன்கோயில், வண்ணார்பண்ணை போன்ற ஊர்களின் பெயர்களிலும் பிறவற்றிலும் ஒத்து, தாயும் சேயுமாய் விளங்கும் செந்தமிழ் நாடும் தென்னிலங்கையும், இறைவழிபாட்டிலும் ஒத்திருத்தல் இயல்பினதே. குறிஞ்சிக் கடவுளாம் முருகனின் ஞானசக்தியாகிய வேலாயுதத்தை வைத்து வழிபடும் வழக்கமமைந்த ஈழநாட்டு முருகனின் திருத்தலங்களில் ஒன்று கதிர்காமம். செல்லக் கதிர்காமம், நல்லூர்க் கந்தசாமி கோயில், மாவிட்டபுரம், கந்தவனம் என்பனவும் சிறப்பு பெற்ற தலங்கள்.

செப்போடு வேய்ந்த சிறிய கொட்டகை வடிவிலமைந்த கதிர் காமவேலவனின் ஆலயம் மாணிக்க கங்கை எனும் ஆற்றினருகிலமைந்து விளங்குவதாகும். ஆண்டுதோறும் சிறப்புற நடைபெறும் ஆடிவேல் விழாவில் எந்திரவடிவிலமைந்த முருகனின் பெட்டகம் காட்டுயானை மேலேற்றப்பட்டு பவனிவருங் காட்சியும் பிறவுமாய சிறப்புகளை நேரில் கண்டு களித்து ஆண்டவனின் திருப்பணியில் தம்வயமிழந்த இந்நூலின் ஆசிரியர், தாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகமென, முருகனைத் தாம் வழிபடுமாற்றால் பாடிய இக்கதிர் காமச் சிந்து, மிகவும் எளியநடையுடைத்தாயினும், முருகனின் எழிலும் எளிமையும், மறனும் திறனும், வடிவும் வரலாறும் நிறைந்த பெருமைகளைத் தினையும் தன்னகத்தே கொண்டிலங்கும் சிறுபேழையாகும் என்பதில் ஐயமில்லை.

தன்னைத் தலைவியாகக் கருதி முருகனிடம் ஊடும் வகையானமைந்த கருத்துக்களும் பிறவும் ஆசிரியரின் அன்பின் உரிமையைக் காட்டுவனவாயமைந்துள்ளன.

மூலச் சுவடியில் காணும் '1732 வைகாசி மீ 10' என்ற குறிப்பு இந்நூல் எழுதப்பட்ட காலத்தையுணர்த்தும் எனத் துணிய இடமிருக்கிறது. மூலம். R. 2227.

"வையாபுரியானவடபழனி தனிலிருக்கும் ஐயா"
"ஆணிப்பொன்னான பழனிபுரிக்கு
அடவாக நின்றமுருகா"

என்பன போன்ற பல அடிகளை ஆயுங்கால் ஆசிரியர் சென்னையையடுத்து வாழ்ந்தவராகக் கருதவும் இயலும்.

கதிர்காமச்சிந்து என்ற தலைப்பில் வரிசையெண்ணுடன் கூடிய முப்பத்தொரு பாடல்களும், அதைத் தொடர்ந்தே வருகைப் பத்து என்னும் தலைப்புடன் ஒன்று முதல் எண்ணிடப் பெற்ற பத்துப் பாடல்களும் எண்ணிடப் பெறாத ஒரு பாடலும் காணப்படுகின்றன.

"எமனானவன் வாதைவருமுன் ... ...
மயில்மீதிலேறி வரவேணுமென்தனருகே"

என்ற முடிவடிகளையுடையதும், முருகனின் சிறப்புக்களைக் கூறி அவர் தம் வருகை வேண்டுவதுமாகிய வருகைப்பத்து என்னும் பகுதியும்

"கர்த்தாவே சுவாமி கதிர்காம வேலா" என்னும் அடி போன்றவற்றால் கதிர்காம வேலவனைப்பற்றியதே வென்பதறிந்து ஒன்றாகப் பதிப்பிக்கப்படுகின்றது.

சிறப்பும் பிறவும் அன்பர்கள் அறிய அவாவி வேண்டுவம்.

பூ. சுப்பிரமணியம்.

கதிர்காமச் சிந்து

சீரார் கதிர்காமச் செந்தூ[1]ரறுமுகவர்
பாராரு மாலைதனைப் பாடவர மேயருள்வாய்
தாரார் குழலுமையாள் தானீன்ற தற்பரனே
காராரு மேனிக் கணபதியுங் காப்பாமே.

நித்த முனைத்துதித்து [2]நீணிலத்தில் கொண்டாட
[3]பத்துலட்சங் கோடிதமிழ்ப் பாடவர மேயருள்வாய்
அத்த னருள்குமரா ஆயோன் மருகோனே
கர்த்தனே யெங்கள்கண்டிக் கதிர்காம வேலோனே. 1

அனுதினமு முனைநினைந்து அடியேனு மீடேற
உனதுடைய மலர்ப்பதத்தை யுகந்தெனக்கு நீயருள்வாய்
[4]மனதிலேயும் வாக்கிலேயும் வஞ்சகமில் லாதடியேன்
[5]கனவிலேயும் நான்மறவேன் [6]கதிர்காம வேலோனே. 2

வாக்கு மனதுமொன்றாய் வண்மைதரு முன்மனது
[7]ஏற்குந் தமிழ்ப்பாட யெனக்குவரம் நீயருள்வாய்
ஆர்க்கும் [8]பெரியோனே அமரர்சிறை மீட்டோனே
கார்க்கும் பெருமானே [9]கதிர்காம வேலோனே. 3

அன்னையும்நீ தந்தையும்நீ யானலு மெந்தனுக்கு
பின்னை யொருவரில்லைப் பேசுவது நீயல்லவோ
முன்னே புரமெரித்த முக்கண்ணனார் தன்புதல்வன்
கன்னல்[10]மொழி வள்ளிபங்கா [11]கதிர்காமவேலோனே. 4

[12]மயிலாடு மாமரைகள் வரும்புலியே வானரங்கள்
[13]பயிலாக வாழ்ந்திருக்கும் பரமபதம் நின்றாடு
துயிலா விளக்கொளி[14]போல் துலங்குவடி வாரைத்தினம்
கைலாச மெந்தன்கண்டிக் கதிர்காம வேலோனே. 5

வில்லா லடித்த விசயனுக்கும் பாசுபதம்
வல்லா யுதங்கொடுத்த [15]மகேச்வரனார் புத்திரனே

மூலச்சுவடியில் உள்ள சொற்கள் :—

1. ரருமுகவர். 2. நீனிலத்தில். 3. பத்துலச்சங்கோடி தமிள். 4. மனதிலையும் வாக்கிலையும். 5. கனவிலையும் நான்மரவேன். 6, 9, 11- கண்டிக் கதிர்காமவேலோனே. 7. ஏர்க்குந் தமிள்ப்பாட. 8. பெரியோனை. 10. மொளி. 12. மைலாடு. 13. பைலாகவாள்ந்திருக்கும். 14. போல்த் துலங்கு. 15. மயேஷ்பரனார்.

எல்லோர்க்கும் நல்லபிரா [2]னிருந்தாயே யெள்ளளவும்
கல்லோ வுனதுமனங் [3]கதிர்காம வேலோனே. 6

செங்கரத்தில் வேலெடுத்துச் சிந்தையிலே [4]வீற்றிருக்கும்
பங்கப் படாதடியேன் பாதகமே தீர்த்தருள்வாய்
மங்கைவள்ளி பங்காளா மாணிக்க மீண்டுவரும்
கங்கைவளர் நாடான [5]கதிர்காம வேலோனே. 7

வாஞள் தனைவதைத்து மகாசூரனை வதைத்து
சேஞடு கார்த்தருளுஞ் செங்கைவடி வேலோனே
பூஞரம் பூண்டதுவும் [6]பொறகமலச் சேவடியைக்
காஞது கண்டேன்கண்டிக் கதிர்காம வேலோனே. 8

மிண்டிச் சமர்க்களத்தில் மேன்மேலுங்[7]கைக்கலந்து
மண்டிப் பெருஞ்[8]சூரன் வாஞல்தனை வதைத்து
[9]தண்டித்து அமரர் சிறைமீட்ட சேவகனே
கண்டிவள நாடான [10]கதிர்காம வேலோனே. 9

[11]பாலாறு நெய்யாறு பரதேசிக்[12]கன்னமிடுங்
கோலாகலக் குமரா கோவேயுனைத் தொழுவேன்
வேலாயுதனே விசாக விளங்குந் தண்டை
காலாயுதக் கொடியோன் [13]கதிர்காம வேலோனே. 10

சுத்தனே நாளுஞ் சுடரே [14]சுடர்க்கொழுந்தே
பித்தஞர் பேரைப் பெருமாள் மருகோனே
[15]குற்றமே செய்தாலுங் கொண்டு[16]பொறுத் தாண்டருள்வாய்
கர்த்தனே யெங்கள்கண்டிக் கதிர்காம வேலோனே. 11

எட்டா லெழுதவொண்ஞ தெண்ணத்துலே யாதிலங்கை
நாட்டா ரறிய நடந்துவரு முன்புதுமை
கோட்டானை சிங்கம் கொடு[17]மறலி வந்தாலுங்
காட்டானை நீவருவாய் [18]கதிர்காம வேலோனே. 12

பொய்யாக வைத்தீர் புலைத்தலை[19]மேல் பொற்பாதம்
மெய்யாக வைத்தீர் வினையகலுங் கண்டாயே

---

2. னிறுந்தாயேயெள்ளழவும். 3, 5, 10, 13, 18 கண்டிக் கதிர் காமவேலோனே. 4. வீத்திருக்கும். 6. பொற்க்கமல. 7. கைக் கலர்ந்து. 8. சூறன்வாஞல். 9. தெண்டித்தமரர் சிறைமீட்ட சேவுகனே. 11. பாலாரு நெய்யாரு. 12. கண்ணடுமிங். 14. சுடற்கொளுந்தே. 15. குத்தமே. 16, பொருத், 17. மரலி. 19. மேல்ப்பொர்ப்பாதம்.

[1]ஐயா முருகா அன்புவள்ளி பங்காளா
கையாலுனைத்[2]தொழுவேன்[3]கதிர்காம வேலோனே. 13

நல்லா தரவுடனே நானுனது [4]பாதங்கதி
அல்லாமல் [5]பேர்விழுதும் அஞ்சலெனக் கார்த்தருள்வாய்
வல்லா யிரஞ்சொல் வயிரமே நெஞ்சில்தரும்
கல்லோ யிதுமனது [6]கதிர்காம வேலோனே. 14

நீயிருக்கத் தெய்வானை நெஞ்சிருக்க வள்ளியம்மன்
தாயிருக்கச் சேயெனக்குச் சலிப்பாய் வருந்துவனோ
வேயிருக்கக் குழலூத [7]வெண்ணெயுண்ட மால்மருகா
காயிருக்கத் தேன்கமுதே [8]கதிர்காம வேலோனே. 15

உன்தாள் துணையெனவே [9]யுறுதியுட னம்புமெந்தன்
சிந்தா ரருள்தீர்க்குஞ் செல்வமிக தந்தருள்வாய்
சிந்தா வெனதாடுஞ் சிவன்மகனே தேவர்தொழும்
கந்தாயிளங்குமரா[10]கதிர்காம வேலோனே. 16

என்னெஞ் சும்நானு மிடஞ்சல் படுந்துயரம்
உன்னெஞ் [11]சறியாத வுண்மையெனக் கேயருள்வாய்
அன்னஞ் சிறுநடையாள் அன்புவள்ளி பங்காளா
கன்னல் சொரிமுருகா [12]கதிர்காம வேலோனே. 17

பட்டுடையு மொப்பனையும் பாசாங்கு சதரமும்
இட்ட சவுக்களியு மிலங்குமுக மார்பழகும்
[13]துஷ்டரண சூரர்களைத் தூரத்திவடி வேலெடுத்து
கட்டழகா வாகாகண்டிக் கதிர்காம வேலோனே. 18

உண்டெனவே நாள்[14]தோறு முன்பாதம் [15]போற்றிசெய்து
வண்டக் கபடுநெஞ்ச வசந்தனு மேயருள்வாய்
பண்டாண்ட வானமுகம் பார்த்ததோ கோலிரங்கங்
கண்டகொம்பு தந்தருள்வாய் [16]கதிர்காம வேலோனே. 19

சொல்லையா நெஞ்சிற் [17]றுலையாக் கவலையெல்லாம்
வெல்லையா யெந்தனுக்கு வேண்டும்பத நாடான
அல்லையா [18]சொல்லுகிறேன் ஆறுலு முன்மனது
கல்லையா கந்தாகண்டிக் கதிர்காம வேலோனே. 20

---

1. அய்யா. 2. தொளுவேன். 3,6,8,10,12,16. கண்டிக்கதிர்காம. 4-பாதங்கெதி. 5. பேர்விளுதும். 7. வெண்ணை. 9. யுருதி. 11. செரியாத. 13. துஷ்ட்ட. 14. தோரு. 15. போத்தி. 17. துலையா. 18. சொல்லுகுரேன்.

உள்ளா [1]ளனுப்பாமல் ஒடிவந்தி ராசைகொண்டு
விள்ளாமல் சும்மா வெறுங்கை [2]முழமிடுமோ
துள்ளாதே போம்போம் துடுக்கெனக்கு மோதிருடா
கள்ளா [3]அறிவேன்கண்டிக் கதிர்காம வேலோனே. 21

[4]பூட்டுகிறீ ராசையென்[5]மேல் பேதைக் குரைத்தாலும்
[6]மூட்டுகிறீர் சண்டை முடிப்பெனக்குத் தந்ததுண்டோ
[7]தீட்டுகிறீர் வேல்விளிமை செங்கையில்வை குண்டந்தன்னைக்
காட்டுகிறீர் சும்மாகண்டிக் கதிர்காம வேலோனே. 22

[8]போராரோ தேவகிரி பொன்மயிலின் [9]மீதேறி
[10]வாராரோ யென்வீட்டில் வந்துவழக் குண்டாமோ
நீர்தாமோ[11]யெள்ளளவும் [12]நிஷ்டூரம் செய்தகந்தா
காராருஞ் சொல்லுங்கண்டிக் கதிர்காம வேலோனே. 23

துள்ளி [13]மயிலேறி துடிதுடித்து ஒடிவந்தீர்
வெள்ளிநகை தந்தவர்போல் வேசியுடன் சொன்னீரே
அள்ளிக்[14]கொடுத்தால் சும்மா அளந்துகொடுத்தால் கடன்காண்
கள்ளியென்றுஞ் சொன்னீரே [15]கதிர்காம வேலோனே. 24

மனக்கோல மாகையினல் வந்து மதியாமல்
எனக்கு மவளுக்கு மிட்டமருந் துபிசகோ
பிணக்கோ யென்னேடும் பேசாமல் மோடிபண்ண
கணக்கோதான் சொல்லுங்கண்டிக் கதிர்காம வேலோனே. 25

என்னுடைய காவல்தன்னை யிடழியவே யெடுத்து
பன்னுந் [16]தமிழ்ப்பாடப் பக்கவரந் தந்தருள்வாய்
அன்னஞ் சிறுநடையா ளன்புவள்ளி பங்காளா
கன்னல் சொரிமுருகா [17]கதிர்காம வேலோனே. 26

[18]வெற்றி வடிவேலால் வெண்ணீச சுர்ர்களைப்
[19]பற்றி முடியறுத்த பன்னிருகை வேலோனே
அத்திமுக வர்க்கிளைய ஆயன் மருகோனே
கர்த்தனே யெங்கள்கண்டிக் கதிர்காம வேலோனே. 27

பூணுதோ யென்னுசை பொருந்தி யவள்வீட்டில்
வேணுதோ யென்னிலங்கை வேடிக்கை பண்ணுமல்

---

1. ழனுப்பாமல். 2. முளமிடுமோ. 3. அரிவேன். 4. பூட்டுகிராசை. 5. மேல்ப்போதக்குரைச்சாலும். 6. மூட்டுகிரீர். 7. திட்டுகிரீர். 8. போராரே. 9. மீதேரி. 10. வாராரே. 11. யெள்ளழவும். 12. நெஷ்டூரம். 13. மயிலேரி. 14. கொடுத்தால்ச்சும்மா அழந்து. 15. கண்டிக்கதிர்காம. 16. தமிள்ப்பாட. 17. கண்டிக்கதிாகாம. 18. வெத்தி. 19. பத்திமுடியருத்தபன்னிறு.

தோணுதோ அவளுமக்குத் தோக்கான பெண்போல
காணுதோ சொல்லுங்கண்டிக் கதிர்காம வேலோனே. 28

[1]வைத்ததோ அம்பவள்மேல் மாரன்விடுங் கணைகள்
[2]தைத்ததோ மோகந் தலைக்குமே லாகிடுமோ
[3]பொய்த்தலா யென்[4]வார்த்தை பொருந்தியவள் வீட்டில்மனம்
கைத்ததோ சொல்லுங்கண்டிக் கதிர்காம வேலோனே. 29

வைய்யா புரியான வடபழனி தனிலிருக்கும்
ஐயா யென்னுவி லனுதினமும் நீயிருந்து
மெய்யாக் கவிதைதன்னை மேன்மேலு மேதுதிக்க
துய்யா வரமருள்வாய் சுப்பிரமணி யத்துரையே. 30

[5]ஆறு முகனே [6]ஆறிரண்டு கையோனே
[7]வேறுவினை வாராமல் [8]வெற்றிதர வேணுமையா
சூரனையும் [9]வேரறுத்த சுப்பிரமணி யத்துரையே
சாருந் [10]தமிழ்பாடத் தயாபரனே வந்துதவாய். 31

முற்றிற்று.

1. வைத்துதோ. 2. தைத்துதோ. 3. பொய்த்துதோ. 4. வாறத்தை 5. ஆரு. 6. ஆரிரண்டுங். 7. வேருவினை. 8. வெத்திதர. 9. வேரருந்த. 10. தமிள்ப்பாட.

வருகைப் பத்து

காணிக்கை கொண்டு வருவார் சனங்கள்
கர்த்தாவை தேடிவருமுன்
ஆணிப் பொன்னான பழனி புரிக்கு
ளடவாக நின்றமுருகா
பூணிக்கை யாக யெமதூதர் வந்து
பொருதவே கட்டவருமுன்
மாணிக்க முத்து மயில்மீதி லேறி
வரவேணு மென்தனருகே. 1

தென்னம் [1]பழங்கள் கனிவா யுதிர்ந்து
தெருவீதி யெங்கும் நிழலாய்
அன்னம் பகுந்த பழனி புரிக்கு
ளடவாக நின்ற முருகா
இன்னந் தளர்ந்து யெளியேன் றனக்கு
யெமனாலே வாதைவருமுன்
வண்ணங் கலந்த மயில்மீதி லேறி
வரவேணு மென்தனருகே. 2

[3]விஸ்தாரமான வயலூரும் செந்தி
விதமாம் விராலிமலையும்
கர்த்தாவே சுவாமி கதிர்காம வேலா
கடல்போல நிறைந்தகுமரா
எத்தேச கால மெளியேன் றனக்கு
யெமனாலே வாதைவருமுன்
[4]வற்றாத முத்து மயில்[5]மீதி லேறி
வரவேணு மென்தனருகே. 3

சிங்கார மான பழனி[6]புரிக்குள்
திரமாக நின்றமுருகா
இங்காருமில்லை யெளியேன் றனக்கு
யெமனாலே வாதைவருமுன்
சங்கார காலன் இடிபோல யேம
ணிதர்காளம் விடுத்துவருமுன்

---

1. பளங்கள் 2. வர்ன்னங்கலர்ந்த மயில்மீதிலேரி. 3. விஷ்த்தார. 4. வத்தாத. 5. மீதிலேரி. 6. புரிக்குள்த்திரமாக.

வங்காரமான மயில்[1]மீதிலேறி
வரவேணு மெந்தனருகே. 4

கோடான கோடி [2]அசுரரை வென்ற
[3]குமாரவுமக்கு அடியேன்
ஓடாமலோடி ஒளியாமல் நின்று
உனையே துதிக்கவருவாய்
தேடாதுதேடி [4]எமதூதர் கையிற்
சிக்காமல் முக்கியமுடனே
வாடாத தோகை மயில்[5]மீதிலேறி
வரவேணு மெந்தனருகே. 5

கையார வும்மைத் [6]தொழுவேன் மனதிற்
கபடேதும் [7]சற்றுமறியேன்
ஐயா உமக்கு ஆளாகும் போது
அடியார் தமக்குமெளியேன்
பொய்யான காய மதுவே யொடுங்கி
உயிர்கொண்டு போகவருமுன்
வையாபுரியான் மயில்[8]மீதி லேறி
வரவேணு மெந்தனருகே. 6

ஏதேது ஜென்ம மெடுத்தேனோ முந்தி
இந்தப் [9]பிறப்பிலறியேன்
மாதாநீ தந்தை குருவென் றெனக்கு
மருகா [10]குறத்திமுருகா
காதோடு கண்க ளிருளாக மூடிக்
கயர்கொண்டு ஓடிவருமுன்
வாதாடிநின்று மயில்[11]மீதி லேறி
வரவேணு மெந்தனருகே. 7

பதிதானும் வைகா புரிவேல ரென்று
பகர்வார் தமக்குவினைபோம்
[12]கதிகாண ஈசர் சிவகாம வல்லி
கிருபா கடாக்ஷமருள்வாய்
துதியாத [13]மூட ரிலரென்று வேலர்
துணையென்று சொன்ன[14]பொழுதே

1, 5, 8, 11, மீதிலேரி. 2. அசுரர்களை. 3. குமரு. 4. இமதூதர் 6. தொளுவேன். 7. சற்றுமரியேன். 9. பிறப்பிலரியேன். 10. குரத்தி. 12. கெதிகாணயீஷர். 13. மோடரிலரென்று. 14. பொளுதே.

மதியாத தோகை [1]மயில்மீதிலேறி
வரவேணு மெந்தனருகே. 8

ஆராரு நூறு வயதான பின்பு
அடியே நினைந்தபடியே
[2]வேறேதும் சிந்தை நினையாம லெந்தன்
[3]யீடான செல்வமருள்வாய்
[4]சூரேசர் போல யெமதூதர் வந்து
தொட்டோடி கட்டவருமுன்
[5]மாறுததோகை மயில்[6]மீதி லேறி
வரவேணு மெந்தனருகே. 9

[7]தொகையான நூறு வயதேயிருந்து
சுழலாம லன்புதுணையாய்
இகையாமல் நெஞ்சு சிதருமல் ஆவி
தினமே நினைந்து வரவே
பகையான குற்ற மெமதூத ரென்னைப்
பாசங் கொண் டோடிவருமுன்
வகையான தோகை மயில்[8]மீதி லேறி
வரவேணு மெந்தனருகே. 10

மையான மேனி [9]யசுரேசர் மாள
வடிவே லெடுத்த முருகா
மெய்யாக வந்து அமரர்சிறை மீள
விடுவித்து வந்தசெயல்போல்
கையார [10]வேண்டி வுயிர்கொண்டு தூதர்
கடிதேகு முன்புமயில்மேல்
வையாவூர்[11]நாடா பழனிவடி[12]வேலா
வரவணேு மெந்தனருகே. 11

முற்றிற்று.

1, 2. வேரேது சிந்தை. 3. யீடானச் செல்வ. 4. சூரேஷர். 5. மாராத, 6, 8. மீதிலேரி. 7. துகையான நூரு. 9. யசுரேஷர், 10. வேண்டும். 11. நாடர். 12. வேலர்.

நெல்லைக் குமரன் துதி

தென் கரையாம் காவிரிக்குத் தேவாரச் சிறப்புமுண்டு
தன்னரிய ஆதீனம் சைவநெறி தழைத் தோங்க
அமைத்திட்டார் நமசிவாயர் ஆவடு துறை யாங்கு
ஆதீனம் வளர்த்திட்டார் அவர்போலும் குருமார்கள்.

நெல்லைநகர் அவணுதித்தார் தேசிகராம் குமாரசுவாமி
எல்லையிலா தமர்ந்திட்டார் எழிலாரும் பட்டத்தில்
அன்னவர்பால் அருள் ஞானம் அடைந்திட்ட ஓரன்பர்
நின்மலமாம் குருவடியில் நிறைத்தாரிந் நறுமலரை.

மசிலா மணியுறையும் மாநகருள் மாண்புற்றீர்
தேசிகராம் நமசிவாயர் திருவடியை விளக்கிட்டீர்
மாதுயற தன்னுருவை மறைத்திங்கு தோன்றிட்டீர்
போதுற்றூர் புகழ் ஞான பானுவே என்றிட்டார்.

பிணமாகும் குடிசையதாம் பிணியுற்ற யாக்கையிது
மணமற்ற பிறவியினை மாண்பென்று மதியேன் நான்
குணமென்ற வாரியினுள் கொண்டுய்க்க வேண்டிடுவேன்
கணமேனும் பிரியாத கருணையினை அருள்புரிவீர்.

பொருண் மாதர் இன்புற்றேன் புலையருடன் தொடர்புற்றேன்
இருளுற்ற இவ்வுடலால் இன்பமுற இறுமாந்தேன்
இருவினையின் கட்டறுத்து இன்பமுற விரும்பிடுவேன்
திருவடியின் புகழ்வழுத்தத் திருவருளைத் தந்தருள்வீர்.

இன்னபல இறைஞ்சிடுவார் இறையுருவம் விளக்கிடுவார்
மன்னியதம் குருவினுடை மாண்புபல தந்திடுவார்
சொன்னலமும் பொருணலமும் சிறந்திடவே சொரிந்துள்ள
தன்னரிய தமிழ்ப்பனுவல் தக்கவர்பால் மிளிர்ந்திடுக.

பூ. சுப்ரமணியம்.

நெல்லைக் குமரன் துதி

மூலம். D. 1801.

சீர்தங்கு நின்னடித் தொழும்புசெய் தகண்டமாய்ச்
செறிந்தபர வெளியினூடு
[1]தெவிட்டாத பேரின்பம் வாய்மடுத் தருந்தியே
தேக்கிட் டிருக்கு மடியார்
ஏர்தங்கு செல்வக் குழாத்தோ டிருந்துநா
னிருவினைக் கட்டறுத்துன்
ஏகாந்த ஞானநி ராலம்ப வாரியை
யினி துண் டிருப்பதென்றோ
வார்தங்கு கொங்கைக் கெளிரிமுன் பசுவான
வடிவந் தவிர்த்தணைத்த
மாசிலா மணியெங்கள் ஞானதே சிகனுறையு
மருமலர்ச் சோலைவேலி
நீர்தங்கு கழனிசூ ழாவடு துறைக்குள் வளர்
நெல்லைக் குமார சுவாமி
நித்தபரி பூரண வகண்டவடி வாய்நின்ற
[2]நிர்மலா னந்தகுருவே. 1

பொல்லாத புலையனேன் கல்லாத கடையனேன்
புத்தியே தொன்று மில்லாப்
புன்மதிச் சிறியனேன் [3]மூடர்தம் சொற்களே
பொருளாகக் கொண்டுதிரிவேன்
நில்லாத வுலகமே நிலையென்று நம்புவேன்
நின்னடித் தொழும்பர் தம்மை
நிந்தித்து வாய்வீண் பிதற்றித் திரிகின்ற
நீ சரொடும் பழகுவே
னெல்லாமு[4]நானன்றி இலையென் றகங்கரித்
தேந்திழை மகளிர் தங்க
ளின்பமே பொருளென்று துன்பமே வுறுகின்ற
வென்னையெப் படியாளுவாய்

மூலச்சுவடியிலுள்ள சொற்கள்:

1. தெவுட்டாத. 2. நிற்மலா 3. மூடர்தன். 4. நானென்றிலை

நெல்லாருங் கழனிசூ ழாவடு துறைக்குள் வளர்
நெல்லைக் குமாரசுவாமி
நித்தபரி பூரண வகண்டவடி வாய்நின்ற
[1]நிர்மலா னந்தகுருவே 2

பஞ்சபூ தங்களாற் றிறப்பட வியற்றிய
[2]படுபிணக் குடிலை யேதும்
பயனின்றி நீண்டமரம் போலே வளர்ந்திடும்
பாதகத் துடக்கைமிக்க
வஞ்சக மடைந்திட்ட பையினை நரம்பென்பு
மயிர்க்குருதி மூளை மச்சை
மலமூத்தி ரங்களாற் பொதிந்திட்ட யாக்கையை
மாண்புடைய தென்றுகருதி
கொஞ்சுமென் மொழிக்கிள்ளை மாதரா ரிளமுலைக்
குவட்டின்மேற் றுஞ்சுமடியேன்
குறையாத வானந்தம் வாய்மடுத் துண்டுநின்
குறைகழல் வழுத்தவருள்வாய்
நெஞ்சகங் குழைந்துருகி மெய்யன்பர் தொழவந்த
நெல்லைக் குமாரசுவாமி
நித்தபரி பூரண வகண்டவடி வாய்நின்ற
[3]நிர்மலா னந்தகுருவே 3

உரைக்குமெண் பத்துநான் கிலக்கமென் றுறுகின்ற
யோனிபே தங்கடோறு
முலவாத துயருற்று மாறிமா றிப்பிறந்
துழன்றுதடு மாறுமடியேன்
குரைக்கின்ற புலைநாய்க் குலம்போற் றிரிந்திடுங்
குணயீன னென்னையுன்றன்
கோதற்ற பேரின்ப வாரியி லழுத்திநின்
குறைகழல் வழுத்த வருள்வாய்
திரைக்கும் புனற்பொன்னி [4]சூழுமா வடுதுறைத்
தேசிக னமச்சிவாயன்
திருவடிப் புகழ்தனை யெங்கணும் விளக்கவோர்
திருவுருக் கொண்டுவந்தோய்

---

1. 3, நிற்மலா. 2. படுபிண குடிலை. 4. சூழுமாவிடுதுறை.

நிரைக்கும் பொழிற்பொங்கர் சூழும்நெல் வேலிவரு
 நெல்லைக் குமாரசுவாமி
நித்தபரி பூரண வகண்டவடி வாய்நின்ற
 [1]நிர்மலா னந்தகுருவே. 4

போக்கின்றி வரவின்றி முதலின்றி யீறுடன்
 பொய்யன்றி மெய்யுமன்றி
புதிதன்றி மற்றைப் [2]பழையதன்றி யைவகைப்
 பூதங்க டானுமன்றி
வாக்கன்றி மனமன்றி யுருவன்றி யருவன்றி
 மருளன்றி யுணர்வுமன்றி
மன்னுபே ரண்டங்க ளெல்லாங் கடந்தின்ப
 வாருதி யாதாய்நிறைந்து
தாக்கின்றி நின்றபர வெளியிலே யிரண்டறத்
 தரித்துநில் லென்றவண்ணந்
தனுவைப் பிரித்துநிறை சச்சிதா னந்தமாஞ்
 சாகர மடுப்பதென்றோ
நீக்கமற நிறைகின்ற பூரணப் பொருளான
 நெல்லைக் குமாரசுவாமி
நித்தபரி பூரண வகண்டவடி வாய்நின்ற
 [3]நிர்மலா னந்த குருவே 5

அலைகடற் றுரும்புபோ லங்குமிங் குஞ்சுழன்
 றறிவற்ற மூடனாகி
யாசையெனு மொருபேய் பிடிக்கப் பிடியுண்
 டலக்கழிந் துணர்வுமாழ்கிக்
குலைகுலைந் திதுவரையு மாதர்சிற் றின்பமே
 குணமென்று கொண்டுதுயர்க்கோர்
கொள்கல மதாகிப் பிறந்திறந் துழல்கின்ற
 கொடியேனை யாள்வதென்றோ
கலைமதிச் சடிலமு முக்கண்ணு மெண்டோட்
 கருமிடறு மானுமழுவுங்
கௌரியோர் பாகமு மாய்நின்ற கோலங்
 கரந்துமா னிடவடிவமாய்

1, 3. நிற்மலா. 2. பழதன்றி.

நிலைகடற் கிடங்குசூ ழாவடு துறைக்குள்வளர்
நெல்லைக் குமாரசுவாமி
நித்தபரி பூரண வகண்டவடி வாய்நின்ற
[1]நிர்மலா னந்தகுருவே. 6

சிலர்விந்து வடிவென்பர் சிலர்நாத வடிவென்பர்
சிலர்பெருங் கன்மங்களே
தெய்வமென் றுரைத்திடுவர் காலமே பொருளென்பர்
சிலருருவ மாகுமென்ப
ரலகிலா வருவமென் றுரைத்திடுவர் சிலர்சிலர்
அருவுருவ மென்பர்[2]சிலபேர்
நீயென்பர் யானென்பர் நாமன்றி வேறுஇவ்
வகிலத்தி லில்லையென்பர்
சலனமுற விவ்வாறு தத்தமக் கேற்றபடி
சஞ்சலப் படுவதல்லால்
சாற்றுதற் கரிதான பேரின்ப நிட்டைநெறி
சாருதற் கெளிதாகுமோ
நிலமிசை புகழ்பெற்ற [3]வாவடு துறைக்குள்வளர்
நெல்லைக் குமாரசுவாமி
நித்தபரி பூரண வகண்டவடி வாய்நின்ற
[4]நிர்மலா னந்தகுருவே. 7

மயலற்று மனமற்று மதியற்று மலமற்று
மற்றைய கரணமற்று
வடிவற்று வரவோடு போக்கற்று லோபங்கள்
மாச்சரி யங்களற்று
செயலற்று நீ நான் எனப்பகுத் துரைத்திடுந்
தெளிவிலாப் பகுப்புமற்று
செப்பிடுங் குறிகுணங்க ளற்றிரவு பகலென
செப்பியவை தானுமற்று
அயலது நட்பற்று மாயையின் செய்கையற்
றவற்றையற் றிரண்டொன்றென
வறைந்திடும் பிணக்குமற் றனந்த மயமாகி
யவசமா யிருப்பதென்றோ

1, 4, நிற்மலா. 2. சிலர்பேர் ரியென்பர் யனென்பர். 3. வாவிடுதுறை.

நியதியிற் பிறழாத வடியவர்கள் சூழ்துறைசை
நெல்லைக் குமாரசுவாமி
நித்தபரி பூரண வகண்டவடி வாய்நின்ற
[1]நிர்மலா னந்தகுருவே. 8

வானாகி நீராகி நிலனாகி யனலாகி
வாயுவே கங்களாகி
மதியாகி ரவியாகி யருவாகி யுருவாகி
மற்றையண் டங்களாகி
யூனாகி வுயிராகி வுணர்வாகி மருளாகி
உள்ளதோ டிலதுமாகி
ஒன்றாகி ஓதும் பலவாகி மற்றவை
யொன்றினுந் தோயாமையாய்
நானாகி நீயாகி யாறுசமை யங்களாய்
நலம்பெற நிறைந்தவின்ப
ஞானசா கரநிலையை நாயேனு முணரும்வகை
நல்குநின் பெருமையெளிதோ
நீநா னெனும்பிணக் கறுத்தோர்கள் போற்றிசெயும்
நெல்லைக் குமாரசுவாமி
நித்தபரி பூரண வகண்டவடி வாய்நின்ற
[2]நிர்மலா னந்தகுருவே. 9

உன்பெருங் கருணையை மறந்துமல மயமாகி
யொளியிழுந் தறிவுமாழ்கி
உமிமூடு நெல்லெனக் களிம்புதோய் செம்பென்ன
வுவருடை யளக்கரென்ன
வன்பெரும் பாந்தள்வாய் மணியெனத் தீயுண்ட
வல்லிரும் பென்னநாளும்
மறைவுண்ட வென்னையுங் கருணையாற் சகலத்தில்
வருவித்து வினைவயத்தா
லின்பதுன் பங்களைத் துய்ப்பித்து மால்பாக
மெய்துமா றறிந்துகுருவா
யெழுந்தருளி வந்துதிரு வடிசூட்டி ஞானநிலை
யிதுவென்று காட்டியாண்ட

1, 2. நிற்மலா

நின்பெருங் கருணையினை யென்னென்று சொல்லுகேன்
நெல்லைக் குமாரசுவாமி
நித்தபரி பூரண வகண்டவடி வாய்நின்ற
[1]நிர்மலா னந்தகுருவே 10

(வேறு)

மருண்மூடிக் கதியிழந்து சமையநூலின்
வழிபிதற்றித் திரிந்துழலு முயிர்களெல்லா
மிருணீங்கிக் கண்விழிப்பச் சைவவாய்மை
யெழில்பெருகத் தென்றுறைசை நமச்சிவாயன்
பொருணீடும் புகழ்விளங்கப் புலவர்போற்றப்
பூவுலகி லவதரித்த ஞானபானு
தெருணீடும் புகழ்நெல்லைக் குமாரசுவாமி
செய்யதளிர் [2]சீரடியெஞ் சிரமேற்கொள்வாம் 1

இரும்பினையும் பொன்னாக்குங் குளிகையெனத்
தெருளாத விழுதை யேனுங்
கரும்பனைய நயமொழியால் வசப்படுத்தி
மெய்யறிவு காட்டவல்ல
பெரும்புகழான் வடகலைக்குந் தென்கலைக்கு
மெல்லையெனப்பிறந்த கோமான்
விரும்பினவர்க் கருணெல்லைக் குமாரசுவாமி
யைப்பணிந்து வினைக டீர்வாம். 2

செங்கனிவாய்க் குறுநகையுந் திருமுகமண்
டலத்தழகுஞ் சிவந்த தாளும்
பொங்கியருள் பழுத்தனைய நயமொழியுஞ்
சிவவேடப் பொலிவு மாகிக்
கொங்கலர்ப்பூம் பொழில்புடைசூழ் துறைசைநகர்
வருநெல்லைக் குமாரசுவாமி
மங்கலமா யிருந்தருளுந் திருக்கோல
மறந்தாலும் மறக்கொணாதே. 3

குருவே துணை.

1, நிற்மலா. 2, சீறடி.

பரிபூரண சித்தி

பிறந்தஉயிர் இறந்திடுதல்இயற்கை யென்ப
தறிந்திருந்து மியக்குபவன் தானே யென்ன
இறுமாந்த அவருணர்ந்து இயங்கு வாரேல்
இவ்வுலகி லவரன்றி யிணைந்தார் யாரும்
பிறந்தபய னிங்கிருத்திப் பிறப்ப றுத்துப்
பெற்றிடுவ ரினிப்பிறவாப் பெரும்பே றென்ற
சிறந்தபய னெண்ணிபரி பூர்ண சித்தி
யெனுமிதனை யிவணுவந்தே யெடுத்த ளிப்பாம்.

அடியவர்க் கெளியனாகி அருளளித் துதவுமையன் அடியிணைக் கமலம் வாழ்த்தி, நிலையிலாக்காயமினியெடா திருக்கத் திடப்புத்தியளிக்கும் நெறிமுறை எடுத்துக் காட்டி, உலக மாயைகளை யறுத்து உயர்நெறியறிதிறனை மொழிவான் தொடங்கு மாசிரியர்

1. நித்திய அநித்தியப் பொருள்களைப் பகுத்தறிதல், 2. இம்மை, மறுமையின்பங்களிலிச்சையறுத்தல், 3. உளம், புலன் இவற்றையடக்கல், இல்லறநிவர்த்தி இன்பதுன்பச்சகிப்பு, உயர் வாக்கியப் பற்று, மன வொருமை-இவை உட்கொளல், 4. இறையடியடைய நினைத்தல் ஆகிய 'சாதனசதுட்டய' மாம் பொருண்மையுடையார் தத்துவவிவேக முடையாராவர் என்பது ணர்த்தி,

பஞ்சபூதங்களின் உற்பத்தி முறை, அவற்றினியல்பு, வேறதாம் தன்மைகளான குணம், விசேடம், சொரூபம், சுபாவம் நிறம், பணி, உருவம், தெய்வம் ஆகியவும, இச்சிறப்புத்தன்மைகள் யானையாதி எறும்பிறுதிக் குடம்பும் பிறவுமாயமையுமாறும், அவ்வுடலுறுப் புக்களின் கூறு, திறன், திறனுறு பொருளின் தன்மை முதலியனவும் விளக்கி,

இருவினை-அவ்வினையுடையாரின்ப துன்பங்கள், மும் மண்டலம், மும்மலம், முக்குணம் அவற்றினியல்புகள், பஞ்சபூதம், பஞ்ச-கோசம், பஞ்சவத்தை, எண்வகைத்தாது-அத்தாதுவின் விளைவுகள், எண் விகாரம், ஒன்பான்வாயில், தசவாயு-அவை உடம்பினை யியற்றும் வகை, தசநாடி, இருபத்தைந்து உண்ணிலை-அவற்றின் தன்மை முதலியனவாகிய தொண்ணூற்ரூறு தத்துவங்களின் விரிவு கூறி,

வியர்த்த மதியொடு பித்துற்ற வாதிகளுடைப்பிணக்கமறு விக்கும் மகா வாக்கியம், முப்பதமாம் தொம்பதம், தற்பதம், அசிபதம் - இவற்றின் முக்கியம், அபிமானி, இலக்கியம், அவத்தை-சீவபரமொன்றெனும் இலக்கியம், இறைவனது எழில், தோற்றம் அருள் முதலியனவும்,

இறையைப் போற்றிய மைந்தனுக் கருள் புரிதல், அவன் தன்னை யறியச் செய்தல், நனவு, கனவு, சுழுத்தி ஆயவும் பிறவும் வினு வழி விளக்கல், அருட் கழல் நல்கிய இறைவனது சிறப்பு, அருள், எளிமை இன்னபலவுமாய உண்மைப் பொருளுணர்வழிகளை எடுத்துரைத்து முடித்திருத்தலின் இந்நூல் பயில் வார் பெரும் பயனுறுதலுறுதி எனக் கொண்டு இவணளிக் கின்றோம்.

விருத்தாசலத்தை யடுத்த மணிமுத்தா நதியின் வடபால மைந்த கானூரில் தோன்றி யவரும், சிறந்த பக்தியும், ஞானமும் பெற்றவரும், மக்களிடத்தும், நாட்டினிடத்தும் பேரன்பு கொண்டவருமாய் விளங்கிய 'பரிபூரணர்' என்பாரால் இயற்றப் பட்டதிந் நூல் என்பதும் பிறவும்

"முத்த முதுகுன்ற முத்தனதி வடபால்
வைத்த புகழ்க்கானூர் வாழ் வவதரித்த
பத்தன் பரி பூரண னுரைத்த பாமாலை—"

"மத்துறு தயிரென மறுகி யுள்ளுடைந்
தெய்த்திட லறவெனை யாண்ட வெந்தையே!"

"சீரார் மழை பொழியத் தேசம் சிறந்தோங்கப்
பாராளு மன்னரச்ச மற்றுப் படிபுரக்கப்
போரார வாரமறப் பெம் மானெனக் களித்த
வேராரும் பேரின்பம் யாவரும் பெற்றின்புறவே,
....
என்பெருந்துயரந் தீர என்னையாட் கொண்ட எந்தை
....
பொன்பெறுங்கமலபாதம் புன்றலை மீதுவைப்பாம்"

என்னும் அடிகளால் அறிதல் கூடும்.

பூ. சுப்பிரமணியம்.

[1]பரிபூரண சித்தி

(மூலம் D 1574.)

ஆதியா யந்தமாகி யறிவதாய்ப் பிறிதொன்றில்லாச்
சோதியே யனந்தமாகிச் சுத்தமாய் நித்தமாகிக்
கோதிலா னந்தமாகிக் குருவுமா யுருவுகொள்ளும்
நீதியா னிமலபாத னிலைபெற னெஞ்சுள் வைப்பாம். 1

(வேறு)

குரு பாரம்பரியம்

மருக்கமழ் பொழில்சூழ் மன்னு[2]கோவர்த்த
மாநகர் மேவு மாதவனை,
இருக்குனன் முடிமேல் இருக்குமின்னமுதை,
யிரும்பிறப்பினையுணர்ந்து வந்தடைந்தோர்
கருக்குழி யணுகா வணமவர் பொருளுங்
காயமுமாவியுங் கவர்ந்து,
திருக்கினை யொழித்தாள் திருவலஞ் சுழியிற்
சிவப்பிரகாசனைப் பணிவாம். 2

(வேறு)

மரணப்பவமென மறுகிவருபகைகள் மருவா
[3]தரணத்திவனென வடையுமடியர் துயரகலப்,
புரணவுணர்பொரு மொழியினுதவி யருள்புனிதன்
றரணிவருசொரூ பனவனடி [4]தலையிலணிவாம். 3

(வேறு)

பாவனுசனைப் பரவைசூ ழுலகெலாம்
படைத்தளித் தழிக்கும்
மூவராகிய [5]மூர்த்தியை யேற்றுவார்
தமக்கு நன்னெறி முற்றி
பூவின்மீதுவந் தருள்செயும் புனிதனைப்
பொன்னுலகினி தாளுந்
தேவதேவனைத், திருமிகு பெருமனைச்,
[6]சிவப்பிரகாசனைப் பணிவாம். 4

மூலத்தில் உள்ளவை :

1. பரிபூறணசித்தி. 2. கோவத்த. 3. தரணிதிவனென. 4. தலையிலணிவர்தம். 5. முற்தியை. 6. சிவப்பிறகாசனை.

(வேறு)

அருமறை யரியயன ளவிடப் படா
வொருபொரு டனையுல கினின் மயக்கறத்
தருமொழி முனிவரன் சவரி தத்துவன்
திருமல ரடியினை சென்னி வைத்துமே. 5

(வேறு)

பைகொளுகத் தனையானும் பங்கயத்திலு றைவானுஞ்
செய்யதாளுந் திருமுடியுந் தேடியங்ஙன் தடுமாற
[1]வையமீதில் நல்லன்பற் கன்பனுகி வந்தாண்ட
துய்யசோதிப் பிரகாசன் துலங்குசெம்பொற் கழல்
தொழுவாம். 6

மருளான் மயங்குபவவேலை மருவாவஞ்சமிகுமாயை
யிருளாலின்பமறியாத விகலோகத்தினிடமாறப்
பொருளாகின்றவருண்மேனிப் பொதுவாய்[2]நின்றபடியேநின்
றருளான்வந்த பரமீச னறிவானந்தனடிசேர்வாம். 7

(வேறு)

அருளிறைவணக்கம்.

அறந்தனது பெருமைசொல்லி அறஞ்செய்வாரை
யவமதித்துப் பின்னுமவர் தொழில் செய்தத்தா
லிறந்துபிறந் திதுகால [3]மவமேயெய்த
யிருவினையே னீடேறல் பொருட்டா[4]லிங்ஙன்
மறந்துமெழில் வானவர்க ளறியா[5]மூர்த்தி
யானிடர்போல் நானிலத்தில் வந்து தோன்றிச்
சிறந்தபரி [6]பூரணனு யென்னையாண்ட
சிவசரண னடியினையே சிந்தைசெய்வாம். 8

(வேறு)

அவையடக்கம்

பெரியவர் பிறர்சொலும் பிழைகள் பேசிடார்
விரிவறி விலாதவர் மிகவும் பேசிடா
ரிருவரு மொழியவென் போல்வரென்கவிக்
கொருகுறை யுரைத்திடார் உரைப்பர் யாவரே. 9

1. வைய்ய. 2. னின்ற. 3. மவமேயெய்த்த. 4. லிஞ்ஞன்.
5. மூற்தி. 6. பூறண.

[1]நூற்பெயர்

ஆதலா லிந்த[2]நூலை வகைவற வென்னையாண்ட
பாதனூர் [3]நாமத்தாலே [4]பரிபூரண சித்தியென்ன
வோதுவாம் வேதாந்தத்தி னுட்[5]பொருள் விளங்கவிங்ஙன்
கோதிலா ஞானத்தன்பு செய்பவர் குறிக்குமாறே. 10

சாதன [6]சதுட்டயம்.

நித்தியா நித்திய வத்துவினை நிருபித்திகபர லோகத்திற்
சுத்தா சுத்த பரபோகந் துறந்து[7]சமதம தொந்தத்தின்
கொத்தாவையு மறவடக்கிக் குடுப பச்சுமைவிட்
டடங்கவெறுஞ்
சித்தாய்நின்ற சிவனடியைச் சேரனினைவர் சிட்டர்களே.
11

(வேறு)

[8]எண்ணுமிது நித்தமித னித்தமென வுணர்த
லிகலோக பரலோக பலத்திச்சை யறுதல்
கண்ணுபுறக் கரணமுட் கரணமெழா தடக்கல்
கருமங்கள் கைவிடுதல் கன்குளிர்ச்சி யாதி
நண்ணிலிவை நேரொக்க நாடுதலில் லறத்தை
நழுவநினைந் திடுதல்சிவ னருள்சேர நினைதல்
புண்ணியல்பொய்க் காயமெடா திடப்புத்தி பண்ணும்
புதல்வற்குச் சாதனமென் றறிஞர்புகன் றனரே. 12

(வேறு)

(மாயா விவேகம்)

சகமென வுடலமென்னத் தருகர ணங்களென்ன
வகமென விதமிதென்ன வழிவில்போ கங்களென்ன
வகைபடு முயிர்கட்காதல் மாயையிம் மாயைநீக்கிப்
புகலரு முத்திசேரு மவர்கள்புண் ணியத்தினரே. 13

[9]இத்திற மானமாயை தனையகன் றிறையை னுடிப்
பத்திசெய் தவன்தன்பாத பங்கயமதனைச் சூடி
முத்தியை யடையவேண்டு மவர்முன்னோர் மொழியப்பட்ட
தத்துவ முணரவேண்டு மதனையுஞ் சாற்றலுற்றும். 14

---

1. னூற்பெயர். 2. னூலே. 3. னுமத். 4. பரிபூறண. 5. பொறுள் விளங்கவிஞ்ஞுன். 6. சதுட்டையம். 7. சமதெம. 8. யெண்ணு. 9. யித்திற.

அங்கியிற்பொறியு மப்பிற் புற்புதமதுவு மங்கி
வெங்கதிர்[1] தன்னிற்ருேன்றி விரிந்துள முகிலும் போலப்
பொங்கிய சிவத்திற்சத்தி மாயைபுத்தேளிர் பூத
மிங்கிவைத் தத்துவங்க ளாமிவை யெங்ஙனென்னில் 15

காலமுந்திசையுந் தொடர்பிர கிருதிக்கண் மகத்துவமதனின்
ஞாலவாங்கார மவத்திலம்புலனும் பஞ்சதன் மாத்திரையவத்தின்
பால்வரும்பூத மைந்தினில் பதினுலுலோக மாயவத்திஞர்படைத்த
மால்விராட் புருடனகத்துலகளிக்கு மாயையாந்தத்துவ
நிலையாய். 16

(வேறு)

தெரிவரிய சிவத்தபிணைப்பின்னை யென்றும்
சிற்சத்தி மாயைமுதற் சிறந்துதோன்றிப்
பரவரிய சத்திகள்பாற் பஞ்ச[2]மூர்த்தம்
பகர்ந்தொன்றி லொன்ருகப் பரிணமித்துப்
பொருவரிய[3]மூர்த்திகள்பாற் சத்தமாதிப்
புகன்றடைவே யையைந்தும் பொருந்தத் தோன்றிக்
கருவுறுமா பூதங்களாகிப் பஞ்சீ
கரித்துலகு சராசரமாய்க் கலந்ததன்றே. 17

(வேறு)

இத்திறஞ் சூக்கபூத மிசையப்பஞ் சீகரித்த
வத்திற முரைக்கிலாதி நாயகன்திருமுன் பைந்தும்
பத்ததா யதிலோரைந்தும் பகிர்ந்துதற் கூருய்நிற்க
வொத்தகூ றைந்துமொன்று நாலதா[4]யுதயமாமே. 18

சத்தந்தன் பாதிநிற்கத் தணந்தவோர் பாதிநாலு
முய்த்தொன்று பரிசரூப மிரதநாற் றத்தோடொன்ற
வைத்தந்தப் பரிசந்தன்னில் வகுத்தவோர் பாதிநாலுஞ்
சுத்தஞ்சேர் சத்தரூபஞ் சுவைமணத் தொன்றுநின்றே. 19

வரைதங்கு முருவந்தன்னில் வகுத்தவோர் பாதிநாலும்
புரைதங்கு சத்தமூறு புகல்சுவை மணம்புக்கொன்றத்
திரைதங்கு மிரதந்தன்னிற் சிறந்தவோர் பாதிநாலு
முரைதங்கு சத்தமூருே [5]டுறுமணத் தொன்றுநின்றே. 20

---

1. தன்னிற் தோன்றி. 2. மூற்த்தம். 3. மூற்த்தி. 4. யுதைய.
5. டுருமண.

எண்ணுங்கந் தத்தின்கூரு யிசைந்தவோர் பாதிநாலும்
பண்ணொன்று சத்தமூறு பகருருச் சுவையைப் பற்ற
வண்ணங்கொ ளாகாசங்கால் மருவெரினீர் மண்ணென்னப்
புண்ணின்றிப் பொதிந்துகொண்ட போதுமாப் பூதமாமே. 21

மாபூதாயகுணம்

விண்முதற் பூதங்கட்கு வேறதாங் குணம்விசேட
மணணிய சொரூபஞ்[1] சுபாவ மதனிறம் பணியரூப
நண்ணிய தெய்வமிந்த நாலிரு வகைகளாக
வெண்ணிய விவைகடம்மை யியம்புவ மிவையுங்கேண்மோ ! 22

மீதுயர்வான குணமானதுசத்தம் விசேடமதிற்சிறப்பா
மோதுசொ ரூபமது வெருளியாகு முரைத்தசுபாவனிலை
யேதுநிறம் பகைதன் பணியாவதிடங்கொடை ரூபமதாஞ்
சீதளமா மதிபோலதிதெய்வஞ் சிறந்த சதாசிவமே. 23

விரைவளிகுணமதாறு விசேடமுந் தெரியாதாதல்
சொரூபமுஞ் சலித்தலாகும் சுபாவமும் விரித்தலாகுந்
தருநிறங் கருமையாகுந் தன்பணிக் கூட்டலாகு
முருவமு மாறுகோண முயர்தெய்வ மகேசனுமே. 24

(வேறு)

அங்கியாகுங் குணிக்குக் குணமொளி
யாகுமித்தின் விசேடம் பெருமையே
துங்கமான சொரூபஞ் சுடுதலாஞ்
சொல்லுகின்ற [2]சுபாவ மெழுதலா
மிங்குமானிற மானது செம்மையே
யித்துநன்பணி யென்னில் விடுத்தலாந்
தங்குரூப மது[3]திரி கோணமாந்
தக்கதெய்வமுந் தையல் பங்காளனே. 25

எற்று நீரின் குணமதி ரதமா
மிதின் விசேடம் பெருமையிதனையே
சுற்றிமேவு சொரூப நெகிழ்தலாஞ்
சொல்சுபாவஞ் சுழன்று விழுதலா
னிற்றலாகும் நிறமது வெண்மையே
[4]நேசமாம் பணி நீதியிற்கட்டலா

1, 2, சுவாவ. 3, திறி. 4, னேசமாம்.

மற்றுரூப [1]மறுவற்ற சந்திரன்
வாய்த்த தெய்வமு மாலாய்மதித்திடே. **26**

காசினிக்குணி யின்குணங் கந்தமே
காணுதற்கு விசேடமு நுண்மையே
தூசதுற்றச் சொரூபங் கடினமே
சுத்தமான சுபாவங் கிடத்தலே
பாசமற்றது பார்நிறம் பொன்மையே
பண்டிதுற்றப் பணியும் பொறுத்தலே
பேசிலித்தினு ரூபஞ் சதுரமே
பேணுமாறதி தெய்வம் பிரமனே. **27**

(வேறு)

சேர்க்கைய தியல்புவானுக் கொன்றதாஞ் சிறந்தகாலுக்
கேற்குமதியல் பிரண்டா மெரியினுக் கதிலொன்றேற்ற
[2]நீர்க்கியல் பொருணன்காகு நிகழுமின் னீதிபோலப்
[3]பார்க்கியல் பைந்தாமாறு பகர்ந்தனர் பழையோரெல்லாம். **28**

(வேறு)

இப்படியிவ் வைம்பூதம் யானையாதி
யெறும்பிறுதிக் குடம்பாக விவற்றின் தேவர்
செப்பரிய திருட்டியொடு திதிசங்காரந்
திரோபாவ[4]மனுக்கிரகஞ் செய்வாராகி
யொப்பரிய பின்னையென வுதித்த மாயை
யொருபொருளைப் பலவாக்கி யுடல்கடோறு
மப்படியே சிற்சக்தி யுயிராய் நிற்க
வதற்குயிராய் சிவனுமசை வறநின்றனே. **29**

(வேறு)

புறநிலைப் பஞ்சவிஞ்சதி

ஒப்பிடவரிய சத்தி வுயிராகவுதித்தபூத
மெப்படியெறும் பீருனை யாதிகட்[5]குடலாயிற்றென்னிற்
றுப்புடைத் தோல்[6]நரம்பு துன்னியதசையுரோமங்
கப்புடை யெலும்பிவ்வைந்துங் காசினிக் கூறதாமே. 30

சோரிசுக்கில நீர்மூளை துன்னிணமிவையோ ரைந்தும்
நீரினிற்கூறதென்று நியமித்துக் கொள்கநேரே

1. மறுவத்த. 2. நீற்கியல். 3. பாற்கியல். 4. மனுக்கிறகஞ். 5. குடலாய்த்தென்னிற். 6. னரம்பு.

யோர்விலாமறப்புறுக்க மைதுனமுடனே சோம்பு
கூரியபசியோரைந்துங் குறைவிலாத் தீயின்கூறே. 31

இருத்தலோ டெழுதல்போதல் கிடத்தல்மெய் [1]வலித்தலைந்துங்
கருத்துறு காற்றின்கூறாய்க் கண்டுகொள் காமலோபம்
பருத்தெழு மோகங்கோபம் பற்றிய மானமைந்தும்
புரைப்புறுவிண்ணின்கூறும் புறநிலை[2]யிருபத்தைந்தே. 32

உண்ணிலைப் பஞ்சவிஞ்சதி

மூக்கொடு[3]நாக்கண்டொக்கு முதுசெவி யோசையூறு
நீக்கிடவரியரூப மிரதமே நிகழுங் கந்தம்
வாக்கொடு பாதம்பாணி வலித்தபா யுருவுபத்தந்
தாக்கியவசனம் போக்குத் தானமே விசற்கானந்தம். 33

(வேறு)

எண்ணிய விருபது மிதற்கு மேன்மன
மண்ணிய புத்தியாங் காரஞ் சித்தமுந்
திண்ணிய விவையுணர் பவனுஞ் சேரவே
யுண்ணிலைப் பஞ்சவிஞ் சதியென் றோர்கவே. 34

சோத்திரக் கருவியாகா யத்தினிற்றோன்றி நின்றிட்
டார்த்திடுஞ் சத்தந்தன்னை யறிந்திடு மங்குதிக்கக்
கோத்தவிச் சத்தந்துத்தங் குரலுழை விளரிதார
மேத்தரு மிளிவிளேடுங் கைக்கிளை யிங்கேழென்ப. 35

தோலது காலின் கூறாய்ச் சொல்லணங் கதுவாகத்தன்
பாலுறு பரிசந் தன்னைப் பரிந்திடும் பரிசமாகக்
கோலியென் றுலேபித்தல் குளிருதல் கொதித்தலன்பாற்
சர்லவே யிருவர் தம்மிற் றழுவுத லென்பர்தக்கோர். 36

கண்ணெனுங் கருவியங்கிக் கூறதாய்க் கலந்துநின்றே
யெண்ணுறு முருவங்காணு மின்னதி தெய்வமாக
நண்ணுமவ் வுருவம் பொன்மை நலந்திகழ் செம்மை வெண்மை
தண்ணிய கருமைதூமந் தானெனப் பகர்வர் தக்கோர். 37

நாவெனுங் கருவினீரின் குணமதாய் நண்ணி நின்று
மாவிர தங்கடேரும் வருணனே தெய்வமாகக்
காவுறு மிரதங்கைப்புப் புளிப்புக்காழ்ப் புடனுவர்ப்பு
தாமவை யுடன்றுவர்ப்புத் [4]தித்திப்பென் றுறதாமே. 38

---

1. வலித்தலஞ்சுங். 2. யிருபத்தஞ்சே. 3. ணுக்கண். 4. தித்திப்பென்றுரதாமே.

மூக்கெனுங் கருவிபூவின் கூறதாய் முகந்து[1]கந்தந்
தாக்கவே யறியுந் தெய்வந் தானுமத் தரணியாகித்
தூக்கியே[2]பார்க்கிற் கந்தந் துற்கந்தஞ் சுகந்தமாகும்
பாக்கிய வான்கட்கெல்லாம் பரமமாய் நிகழுமன்றே. 39

வாக்குவின் கூறதாகி வசனிக்கும் வாயுக் கூறுய்ப்
போக்கினைச் செய்யும் பாதம் புகலங்கிப் பொருந்திப்பாணி
பாக்கியத் தானஞ்செய்யும் பாயுருவுபத்த மண்ணீ
ராக்கியக் கூறதாகு மவத்தொழில் விசற்கானந்தம். 40

(வேறு)

வாக்கின் [3]றெய்வ மெனலாகும்
வலிந்தபாணிக் கிந்திரனும்
போக்கென் றுழலும் பதத்துக்குப்
பொருவில் [4]திருவிக் கிரமன்மல
நீக்கஞ்செய்யும் பாயுவுக்கு
நினையிற் றெய்வ நிருதியுமா
மாக்கஞ் செய்யு முபத்தத்துக்
கடுத்த தெய்வ மயனுமே. 41

[5]ஐயமுறு மனம்பூமி தன்னின்கூறு
யதிதெய்வஞ் சந்திரனே யாகக்கொண்டு
பொய்யுமெய்யும் நிச்சயிக்கும் புத்திநீரின்
பொருந்திய கூறுய்த்தெய்வம் பொன்னேயாகத்
திவ்விய தாங்காரமபி மானம் பண்ணுந்
தெய்வமுருத் திரனோடு தீயின்கூறு
யுய்யவரு காலின் கூறுகிச்சித்த
[6]முட்கொண்டு சலிக்குமிதற் குணர்வே தெய்வம். 42

பஞ்சகோசம்

கோசமே தன்னகோசங் குலவிய பிராணகோச
மாசிலா மனத்தின்கோச மருவுவிஞ் ஞானகோச
மாசிலா னந்தகோச மைந்திவை யொன்றுக்கொன்று
பேசிலோ வுள்ளதாகிப் பிரமத்தா னின்று பின்போம். 43

---

1. கெந்தந். 2. பாற்கிற்கெந்தந்துற்கெந்தஞ். 3. றெய்வமனலாகும். 4. திருவிக்கிறமண். 5. அய்யமுறு. 6, முட்க்கொண்டு சலிக்குமிதற்க் குணர்வே.

பஞ்சவத்தை

புலன்களுடன் கரணங்கள் புருவனுப்பண்
பொருந்தியபோ தநுனவாம் புலன்கள்நிற்க
வலைந்தலைசெய் கரணமுடன் கண்டந்தன்னி
லமர்ந்தபொழு தநுகனவாமவத்தின் சித்தங்
[1]கலந்திதயந் தன்னினிற்றல் சுழுத்தியாகுங்
கலப்பறவே கலந்துந்தி யும்பராகித்
துலங்குமது துரியமது விடமூலத்திற்
சொருகுமது சொல்லவொண்ணுத் துரியாதீதம். 44

அட்டதாது

இரதநல் லுதிரமூளை யிறைச்சிமே லிலங்குமேதை
வரதரு மத்திமச்சை வாய்த்தசுக் கிலம்[2]பலமென்
றுரைதரு தாதுவெட்டு முண்டசோ றுதகமொத்து
விரைதரு வித்ததாகி விளைந்தவா விளம்பலுற்றேன். 45

தாதுவிளைவு

அருந்திய வன்னபானம் [3]நாள்மூன்றி லங்கந்தன்னில்
பொருந்திய விரதமாகு மதன்மலம் புருடநீராந்
